# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.61/2024

PW1–அன்பழகன் நாள்.23.02.2026

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என்மனைவி கவிதாவை நீதிமன்றத்திற்கு நான் அழைத்துவரவில்லை. நான் 2010ம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து வந்தேன். அதன்பிறகு நான் வெளிநாடு செல்லவில்லை. 2011, 2012ம் ஆண்டில் என்மனைவி கவிதா சில சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அவர் நல்ல நிலைமையில் இருந்ததால் தான் 2011, 2012ம் ஆண்டில் சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்மனைவி கவிதா பிறவியிலேயே ஊமை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் காதுகேட்கவில்லை என்று தான் சான்று தாக்கல் செய்துள்ளேன் என்றும், அவர் பிறவியிலேயே ஊமை என்பதற்கு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மனைவி மனநிலம் குன்றியவர் என்பதை காட்ட மருத்துவசான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மனைவி 6ம் வகுப்பு வரை படித்துள்ளார். என்மனைவி தையல் பயிற்சி வகுப்பிற்கு சென்றுள்ளார். சிறுவாச்சூரில் உள்ள நிலத்தை நான் விற்றதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போன்று நான் நிலத்தை விற்று பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவசான்று பெறுவதற்கு நானும், என்மகனும் சென்றோம். என்மனைவியை மருத்துவகுழுவிடம் நான் அழைத்து செல்லாமல் மருத்துவசான்று பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என்மனைவியின் நிலைமை நான் கூறுவதுபோன்று இருந்தால் அவரை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்திருப்பேன் என்றால் சரியல்ல. என்மனைவி அவர் சகோதர்களுடன் பேசிக்கொண்டு சில சொத்துக்களை தன்வசம் வைத்துக்கொண்டு, சில சொத்துக்களை அவர் சகோதர்ருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

என்மனைவி நல்ல நிலைமையில் தாவா தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிகொடுத்தார் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்தபின்னர் அதுசம்மந்தமாக சுமார் 4, 5 முறை பஞ்சாயத்து பேசியுள்ளோம் என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்தவிவரம் தெரிந்து தான் பஞ்சாயத்துபேசினோம் என்றும், வழக்கிற்காக தற்போது அதை தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. உரிய காலஅவகாசத்திற்குள் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மனைவி நல்ல நிலைமையில் இருக்கும்போது மோசடியாக மருத்துவஆவணம் பெற்று வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மருத்துவசான்றிற்கு முன்பும், பின்பும் அவர் மருத்துவம் பெற்றதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் நகல் வாங்கிய தேதியிலேயே அதுபற்றிய விவரம் எனக்கு தெரியுமென்றும் உரியகாலத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2022ம் ஆண்டிற்கு முன்னர் பிரச்சனைக்கு முன்புவரை நானும், பிரதிவாதிகளும் ஒன்றாக தான் இருந்தோம். 2016ம் ஆண்டு நான் தனி வீடு கட்டி சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. தற்போதும் என்மனைவி நல்லநிலைமையில் தான் உள்ளார் என்றும், அவருக்கு தெரியாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.